# கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு

## கிராமிய அபிவிருத்திப் பணியகம்

## முன்மொழிவுகளுக்கான அழைப்பு: நிலைத்த வாழ்வாதாரங்கள் மூலம் சமூகங்களை வலுவூட்டுவதற்காக புத்தாக்க வணிகங்களை இணைத்து உருவாக்குதல்

கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் முக்கிய முன்முயற்சிகளில் ஒன்றாக வறுமையை ஒழிப்பதற்கான பிரஜாசக்தி தேசிய அமைப்பு குறிப்பாக கிராமிய மற்றும் தோட்டத் துறைகளில் பன்முகப்பட்ட வறுமையை குறைப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. பிரஜாசக்தி அமைப்பு மக்களின் நேரடி பங்கேற்புடன் சமூகத்தைப் பாதிக்கக் கூடிய முக்கிய விடயங்களை அடயாளம் காண்பது மற்றும் அந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதில் முன்னுரிமை அளிப்பதற்கு கி.உ. மட்டத்தில் நிறுவப்பட்ட ''சமூக அபிவிருத்தி சபையை (CDC)'' வலுவூட்டுவதை நோக்காகக் கொண்டுள்ளது.

இதனுடன் இணங்கி, பொருளாதார ரீதியாக சாத்தியமான, நிலைத்த மற்றும் புத்தாக்க வணிக முயற்சிகளை செயற்படுத்தி வறுமையை ஒழிக்கும் தேசிய முயற்சியில் பங்கெடுக்க தகுதியான தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அமைச்சு அழைப்பு விடுக்கிறது. இம்முயற்சிகள் கணிசமான எண்ணிக்கையிலான புதிய பயனுள்ள வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், மக்களை/குடும்பங்களை மதிப்புச் சங்கிலியின் முக்கிய செயற்பாட்டாளர்களாக உதா: ஒப்பந்த அடிப்படையிலான உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும்/அல்லது உப ஒப்பந்தக்காரர்களை ஈடுபடுத்தும். வணிக முயற்சிகளின் முழுமையான செயற்படுத்தலுக்காக எதிர்பார்க்கப்படும் காலவரை ஒன்று தொடக்கம் மூன்று ஆண்டுகளாகும்.

**இந்தத் திட்டத்தின் நோக்கம்:**

- ஏற்றுமதி நோக்கமுடைய மதிப்புக் கூட்டிய தொழில்துறைகள் மூலம் வருமான உருவாக்கத்தை மேம்படுத்துதல்
- உள்ளூர் வளங்களை பயன்படுத்தும் நடுத்தர மற்றும் நுண் நிலை தொழில் நிறுவனங்களை ஆதரித்தல்
- நிலையான வாழ்வாதாரங்களையும் சுயதொழிலையும் ஊக்குவித்தல்

**முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக தகுதி பெற்ற கூட்டாண்மையாளர்கள்:**

அமைப்புகளின் பின்வரும் பிரிவுகள் வர்த்தக முதலீட்டு முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு தகுதி பெறும்;

- நிரூபிக்கப்பட்ட களப் பதிவுகளுடன் தனியார் துறை அமைப்புகள்
- புத்தாக்க மற்றும் செயற்படுத்த முடியுமான முதலீட்டுத் திட்டங்களுடன் தொழில்முயற்சியாளர்கள்
- வறுமை ஒழிப்பு திட்டங்களில் அனுபவத்துடன் அரசு சாரா அமைப்புகள்
- வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள்
- கூட்டுறவு சங்கங்கள்
- உள்ளூர் அரச நிறுவனங்கள்

(அரச தனியார் மக்களின் கூட்டாண்மையுடன் (4P வடிவம்) வர்த்தக முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரர்கள் ஊக்குவிக்கப்படுவதோடு பெண்கள் தலைமையிலான, இளைஞர்கள் தலைமையிலான அல்லது பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் முன்னின்று நடத்தும் அணுகுமுறையுடனான வர்த்தக முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்)

**நோக்கம் மற்றும் முன்னுரிமை துறைகள்:**

எந்த ஒரு துறையில் இருந்தும் புத்தாக்க வர்த்தக முன்மொழிவுகளுக்கான அழைப்பு திறந்திருந்தபோதும், பின்வரும் துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:

- ஏற்றுமதி சார்ந்த விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்துறைகள்
- கால்நடை, மீன்பிடி மற்றும் மீன் வளர்ப்பு
- உணவு செயலாக்கம் மற்றும் பெறுமதி சேர் உற்பத்திகள்
- ICT சேவைகள் மற்றும் பசுமை காலநிலை மீள்திறன் வர்த்தகங்கள்

**இணை நிதியளிப்பு:**

பன்முகப்பட்ட வறுமையினால் பதிக்கப்பட்ட குடும்பங்களை நிலைத்த பொருளாதார வலுவூட்டலை நோக்கி சம்பிரதாயமான நலன்புரிக்கு அப்பால் சென்று அதிக தாக்கமுடைய, புத்தாக்க வர்த்தக முயற்சிகளுக்கு பொருந்தும் மானியங்கள் அல்லது பொருள் சார்ந்த உதவியை வழங்குவதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளது. அந்த நோக்கத்திற்காக, நான்கு முன்னுரிமை துறைகளின் ஒவ்வொரு துறைக்கும் அதிகபட்சம் 250 மில். ஒதுக்கீடு செய்யப்படும். அதன்படி, தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் குறைந்த பட்ச முதலீடு ஒன்றாக 50 மில். ரூபாவும் அதிகபட்ச முலீடாக 200 மில். ரூபாவுடன் வர்த்தக முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு கோரப்படுகின்றனர். முன்மொழியப்படும் வர்த்தகத்தின் இயற்கை அதேபோன்று சமூக மற்றும் பொருளாதார தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தேர்வு செய்யப்பட்ட திட்டங்களுக்காக இணை நிதியளிப்பை வழங்கும் போது அமைச்சு நெகிழ்வான அணுகுமுறையை பின்பற்றும். விண்ணப்பதாரர்கள் முன்மொழியப்பட்ட வர்த்தக முயற்சியை செயற்படுத்துவதற்கு அமைச்சிடம் இருந்து கோரப்படும் இணை நிதி அளிப்பின் வீதம் மற்றும் உதவியின் வகையை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**முன்மொழிவை சமர்ப்பிப்பதற்கான தேவைகள்**

விண்ணப்பதாரர்கள் www.mrds.gov.lk என்ற அமைச்சு இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்யக்கூடிய குறிப்பிட்ட முதலீட்டு முன்மொழிவு மாதிரி வடிவத்தின் மூலம் வர்த்தக முன்மொழிவு ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். வர்த்தக முன்மொழிவு மதிப்பீட்டு அளவுகோலும் www.mrds.gov.lk என்ற அமைச்சு இணையதளத்தில் கிடைக்கப்பெறும்.

**அவசியமான ஆவணங்கள்:**

- முழுமையான விண்ணப்பப் படிவம்/ முன்மொழிவு.
- பதிவுச் சான்றிதழ் (இருப்பின் குழுக்களுக்கு/தொழில் நிறுவனங்களுக்கு)
- பொருந்துவதாயின் பணிப்பாளர்கள் சபையின் விபரம்
- கடந்த கால அனுபவம், அடிமட்டத்தில் நிரூபிக்கப்பட்ட முடிவுகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்கள்/ வர்த்தகங்கள்

**சமர்ப்பிக்கும் முறை மற்றும் காலக்கெடு:**

- **சமர்ப்பிக்கும் முறை:** வன் பிரதி
- **தலைப்பு:** ''நிலைத்த வாழ்வாதாரங்கள் மூலம் சமூகங்களை வலுவூட்டுவதற்காக புத்தாக்க வணிகங்களை இணைத்து உருவாக்குதல்'' – முன்மொழிவுகளைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
- **முகவரி:** செயலாளர், கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு, கிராமிய அபிவிருத்திப் பணியகம், 09 ஆவது மாடி, கட்டம் II, செத்சிறிபாய, பத்தரமுல்லை.
- **காலக்கெடு:** 2026 மார்ச் 16 அன்று திங்கட்கிழமை நண்பகல் 12.00 அல்லது அதற்கு முன்னர்

தாமதிக்கும் அல்லது முழுமை பெறாத விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. முன்மொழிவுகளை மேலதிகச் செயலாளரின் (கிராமிய அபிவிருத்தி) அறையில் வைக்கப்பட்டு விலைக்கேட்புப் பெட்டியில் இடுவது அல்லது மேலுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் II, 1ஆவது மாடி, பிரதான கேட்போர்கூடத்தில் முன்மொழிவு ஏற்பது முடிவுற்ற உடன் திறக்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு:**

குறுகியபட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் தகவல் தெரிவிக்கப்படும் என்பதோடு அது,

- நேர்முகப்பரீசைகள் அல்லது தளப்பயணங்களுக்கான வசதிகள்
- மேலதிக விபரங்களை வழங்குவது அல்லது ஆவணங்களை வழங்குவதற்கு அமையும்.

எந்தக் காரணமும் கூறாது எந்த ஒரு முன்மொழிவையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமையை கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு பெற்றுள்ளது.

ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் 2026 மார்ச் 13 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ruraldevelopmentbureau@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் தெளிவுகளை கோருவதற்கு அல்லது மேலதிக விபரங்களை பெற முடியும்.

**செயலாளர்,**
**கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு,**
**1ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் II,**
**பத்தரமுல்லை.**
**2026.02.12**